இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 87 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 21 – வெள்ளிக்கிழமை 07 நவம்பர் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 87 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 21 - Friday 07 November 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## பல்வேறு இடங்களில் பா.ஜ.க.வினர் முறைகேடு!

# விறு விறுப்பாக நடைபெற்றது பீகார் சட்டமன்றத் தேர்தல்!

## மதியம் நிலவரப்படி 55 சதவிகிதம் வாக்குப் பதிவு!




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், திருநெல்வேலி மற்றும் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.

**பாட்னா, நவ.7-**

**பீகார் சட்டமன்றத் தேர்தலில் மதிய நிலவரப்படி 55 சதவிகிதம் வாக்குகள் பதிவாகி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

243 தொகுதிகள் கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடத்தப்படு கிறது. முதற்கட்டமாக 121 தொகுதி களில் நேற்று காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தம் 45 ஆயிரத்து 341 வாக் குச்சாவடிகளில் மக்கள் வாக்களித் தனர். இந்நிலையில், மதிய நிலவ ரப்படி 55 சதவிகித வாக்குகள் பதி வானதாக தகவல் வெளியாகி யுள்ளது. தேர்தலுக்காக துணை ராணுவம் மற்றும் காவலர்கள் உள்பட மொத்தம் 4.5 லட்சம் பேர் பாதுகாப்புப் பணிகளில் ஈடு பட்டனர்.

பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்ற நிலை யில், நீண்ட வரிசையில் நின்று மக்கள் ஆர்வமுடன் வாக்களித்து வந்தனர். இந்த நிலையில், இந் தியா கூட்டணி கட்சியின் முதல்வர் வேட்பாளரும், ஆர்ஜேடி கட்சியின் தலைவருமான தேஜஸ்வி யாதவ் மற்றும் அவரது மனைவி ராஜ்ஸ்ரீ ஆகியோர், பாட்னாவில் வாக்க ளித்தனர். மேலும், ஆர்ஜேடி கட்சி யின் நிறுவன தலைவர் லாலு பிர சாத் யாதவ் உள்ளிட்ட தலைவர் களும் தங்களது வாக்கினை செலுத்தி, ஜனநாயக கடமையாற் றினர்.

பீகாரில் வாக்குப்பதிவு நடை பெற்று கொண்டிருக்கும்போதே பல்வேறு முறைகேடுகளை பா.ஜ.க., அரங்கேற்ற தொடங்கி விட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

ஒவ்வொரு மாநிலத்தில் நடை பெறும் சட்டமன்றத் தேர்தலின்போ தும் பல்வேறு முறைகேடுகளை செய்து பா.ஜ.க., வெற்றி பெறுகி றது. அந்த வகையில், தற்போது சட்டப்பேரவை தேர்தலை சந்தித்து கொண்டிருக்கும் பீகாரில் பா.ஜ.க., தனது மெகா முறைகேடுகளை தொடங்கியுள்ளது. வாக்குப்பதிவின் போதே பல்வேறு ஜனநாயக முறைகேடுகளை பா.ஜ.க., அரங் கேற்றத் தொடங்கியுள்ளதாக புகார் எழுந்துள்ளது. இந்நிலையில், முங்கர் தொகுதியில் போட்டியிடும் ஜன்சுராஜ் கட்சி வேட்பாளரை பா.ஜ.க., தனது கட்சியில் இணைத் துள்ளது. தேர்தலுக்கு பின்பு மற்ற கட்சிகளின் எம்.எல்.ஏ.க்களை வளைக்கும் முயற்சியில் பா.ஜ.க., ஈடுபடும் என்றும், அதற்கான முன் னட்டம் இது என்றும் அரசியல் கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

இதனிடையே, பீகாரில் இந்தியா கூட்டணி வலுவாக இருக்கும் தொகுதிகளில் வாக்குப்பதிவை தாமதப்படுத்த திட்டமிட்டு மின்சா ரம் துண்டிக்கப்படுவதாக ராஷ்ட் ரிய ஜனதா தளம் பரபரப்பு குற்றம் சாட்டியுள்ளது. தேர்தல் ஆணை யம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, வாக்குச்சாவடிகளில் மின் இணைப்பினை உறுதிசெய்ய வேண்டும் என்று ராஷ்ட்ரிய ஜனதா தளம் வலியுறுத்தியுள்ளது.

பீகார் சட்டப்பேரவைத் தேர்த லில் வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுப்பது, போலி வாக்கா ளர்கள் மூலம் வாக்களிப்பது என பல்வேறு முறைகேடுகளை ஆளும் பா.ஜ.க. ஐக்கிய ஜனதாதளம் கூட் டணி ஆட்சியாளர்கள் அரங் கேற்றி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பீகார் மாநிலத்தில் ஏழை மக்களை வாக்களிக்க அனு மதிக்கக் கூடாது என ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் ஒருவர் பிரச்சா ரத்தின்போதே பேசியது சர்ச் சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், தானாபூர் நகரை ஒட்டிய நசீர் கஞ்ச் கிராமத் தில் வசிக்கும் மக்கள் படகு மூலம் தானாபூர் சென்று வாக்களிக்க வேண்டும். ஆனால் படகுகளை இயக்க விடாமல் போலீசார் உதவி யோடு பா.ஜ.க.வினர் தடுத்ததால் நசீர்கஞ்ச் கிராம மக்கள் பா.ஜ.க. வுக்கு எதிராக முழக்கமிட்டு போராட்டம் நடத்தினர்.

## எந்த மாநிலமும் செய்திராத வகையில்

# தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வு மருத்துவத் திட்டங்கள்!

## 10 வகையான 'நலன்காக்கும் ஸ்டாலின்' சிறப்பு போட்டிகளை தமிழ்நாடு அரசு நடத்துகிறது!

**சென்னை, நவ.7-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்திராத மக்கள் நல்வாழ்வு மருத்துவப் பணிகளை செய்து வருகிறார். அந்த வகையில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்ற புதிய திட்டம் 02.08.2025 முதல் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த் திட்டம் மக்கள் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் குறித்தும், மக்களின் உணர்வு களை அறிந்துகொள்ளும் வகையில், பொதுமக்கள் பங்கு பெறும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் பத்து வகை யான சிறப்புப் போட்டிகளை நடத்தவுள்ளது.**

தமிழ்நாடு அரசு சாமானிய மக்களும் தர மான மருத்துவ சேவைகளை பெற வேண்டும் என்பதற்காக மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய் வகத் திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத் துவத் திட்டம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை கள் போன்ற பல்வேறு சுகாதார திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

ஏழை எளிய மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் விதமாக, நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து கட்டணமின்றி முழு உடல் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை கள் அளிக்கும் 'நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்' என்ற சிறப்பு மருத்துவ சேவையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2.8.2025 அன்று தொடங்கி வைத்தார்.

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் வாயி லாக, தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில் உள்ள 1,256 முகாம்கள் வழியாக ஏழை எளிய மக்களுக்குக் கட்டணமின்றி மருத்துவச் சேவைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதிநவீன பரிசோதனை வாயிலாக நோய் களைக் கண்டறிந்து உடனடியாகக் கட்டண மில்லாச் சிகிச்சை அளிப்பதே இதன் நோக்கம். இதுவரை 407 முகாம்கள் நடத்தப்பட்டு, 6,37,089 பேர் முழு உடல் பரிசோதனை செய்துள்ளனர்.

இன்றைய ஆரோக்கியமற்ற உணவு பழக்க வழக்கங்கள், உடல் உழைப்பு மற்றும் உடற்பயிற்சி இல்லாதது போன்றவற்றால், நீரிழிவு, இரத்த கொதிப்பு, இதய நோய், புற்று நோய் போன்ற தொற்றா நோய்களின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. எனவே, ஒவ்வொருவருக்கும் முழு உடல் பரிசோதனை என்பது மிகவும் அவசியமானது.

பொதுவாக தனியார் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனைகள் செய்ய வேண் டும் என்றால் ரூ.15,000 வரை செலவாகும். ஆனால், நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத் துவ முகாமில் அனைத்து பரிசோதனைகளும் கட்டணமின்றிச் செய்யப்படுகிறது. அது மட்டு மல்லாமல், நோய் கண்டறியப்பட்டால், அதற் கான சிகிச்சைகளும் மருந்துகளும் கூட வழங் கப்படுகின்றன.

"நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம்களில், எக்ஸ்ரே, ஸ்கேன், இரத்தப் பரி சோதனைகள் மற்றும் புற்றுநோய் (மார்பகம், கருப்பை வாய்) கண்டறிதல் பரிசோதனைகள் உட்படப் பல பரிசோதனைகள் வழங்கப்படு கின்றன. இம்முகாம்கள் ஆகஸ்ட் 2025 முதல் பிப்ரவரி 2026 வரை ஓராண்டுக்கு, ஒவ் வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் இப்போட்டிகளை நடத்துகிறது.

### போட்டிகளும் அதன் விவரங்களும்

1. உயிர்காத்த முகாம் உங்கள் உண்மை அனுபவத்தைப் பகிருங்கள்!

"நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகா மில் கலந்துகொண்டதன் வாயிலாக நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்தவர் பெற்ற நன் மைகளை, உங்கள் உண்மையான அனுப வமாகப் பகிரலாம். சரியான நேரத்தில் நோய் கண்டறியப்பட்டது, சரியான மருத்துவ ஆலோ சனை கிடைத்தது அல்லது பெரிய மருத்துவச்


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## ரூ.127.57 கோடியில்

# 6,672 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைகின்றன!

## தமிழ்நாடு அரசு ஏற்பாடு!

*சென்னை, நவ.7-*

*127 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவில் 5 ஆயிரத்து 322 பள்ளிகளில் 6 ஆயிரத்து 672 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்க தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.*

*தமிழ்நாட்டில் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அமைந்தது முதலே அரசு பள்ளிகளில் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், 127 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவில் 5 ஆயிரத்து 322 பள்ளிகளில் 6 ஆயிரத்து 672 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்க தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது. இதேபோல், 159 கோடியில் 2 ஆயிரத்து 232 அரசு பள் ளிகளில் 2 ஆயிரத்து 236 ஆய்வகங்கள் அமைக்கவும் தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது. தமிழ்நாட் டில் உள்ள அரசுப்பள்ளி களில் 2026-27க்குள் 6 ஆயி ரத்து 672 ஸ்மார்ட் வகுப் பறைகள் அமைக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். 37 ஆயிரத்து 626 அரசு பள்ளிகளில் 30 ஆயிரத்து 774 பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள், ஆய்வகங் கள் ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது.*

## தமிழ்நாட்டில்

# 12 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு!

*சென்னை, நவ.7-*

*தமிழ்நாட்டில் 12 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள் ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; திண்டுக்கல், மதுரை, சிவ கங்கை, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், சேலம், கள்ளக்கு றிச்சி, தருமபுரி, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. நாளை ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.*

*8ம் தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத் துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய் யவாய்ப்புள்ளது. சென்னையை பொறுத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகு திகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 33° செல்சி யஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2425" செல்சி யஸை ஒட்டியும் இருக்கக்கூடும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.*